(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) பேரவையில் அமைப்பு—காங்கிரஸ், காங்கிரஸ் கட்சி இவைகளுக்கு தனித்தனியே இடம் ஒதுக்கப்பட்டுள்ளது குறித்து.

THIRU N. K. PALANISAMY : Sir, is it fair on the part of the Hon. Speaker to provide Congress (O) and Congress (R) members separate seats and blocks while their respective Leaders themselves including a member of the House have declared that there is no more Congress (O) and Congress (R) and that the party would comprise of only Congress.

(முற்பகல்—11-00).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட தகவல் பேரவைத் தலைவருக்கு வரவில்லை. ஆகவே, பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

(ஆ) முதலமைச்சர் 1974-75-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை அளிப்பது குறித்து :

DR. H. V. HANDE : Mr. Speaker Sir, Under Rule 83 (4) of the Assembly Rules, I raise a point of order. We have before us, Item II in the Agenda, namely "Budget for the year 1974-75—The Hon. Dr. M. Karunanidhi Chief Minister will present the Budget for the year 1974-75". May I know whether it is morally right on the part of our Hon. Chief Minister to present the Budget especially after the rout and debacle of the Ruling party, Dravida Munnetra Kazhagam, in Coimbatore and Pondicherry elections.....

(கூச்ச, குழப்பம்.)

நான் ரொம்ப அமைதியாக ஒரு பாயிண்டைச் சொல்கிறேன். யாரையும் தாக்குவதற்காகச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே பேசப்படுகிற பாயிண்ட் ஆப் ஆர்டர் இந்த அவையில் நடந்தவற்றைப் பற்றி இருக்கவேண்டும் என்று நான் பல முறை சொல்லியிருக்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்றால், நம்முடைய விதி முறைகளிலிருந்து மாறி நம்முடைய சட்டமன்றம் செயல்பட்டிருந்தால், கடைப்பிடிக்க வேண்டிய மரபுகளிலிருந்து மாறி இருந்தால் அதைச் சுட்டிக் காட்டித் தான் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். வெளியே நடக்கும் நிகழ்ச்சிகளை வைத்துப் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது. ஆகவே, பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.